DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 12/2022 |
| Police Station | Thiruppachethi P.S |
| Deposition of Witness for | LW.1/PW.1 |
| Name | குமார் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A2, A4 produced. A1, A3 present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 22.12.2023 at 10.50a.m

**முதல் விசாரணை:**

நான் T.வேலங்குளத்தில் வசிக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 10.12.2020 முன்பாக சுமார் ஒரு மாதமாக சொத்து சம்பந்தமாக குண்டுமணி என்ற கருப்பசாமி, அருண் என்ற பூச்சி இருளப்பன், மாசாணம் என்ற பொன்னி, வேலூர் சேர்ந்த வினோத்கண்ணன் ஆகியோருக்கும் எங்களுக்கும் பிரச்சனை இருந்தது. 10.12.2020 அன்று குண்டுமணி என்ற கருப்பசாமி என்பவர் வண்டியை காணவில்லை என்று பிரச்சனை செய்தார்கள். அது சம்பந்தமாக வாய்தகராறு ஏற்பட்டது. பொன்னி, மாசாணம் ஆகியோர் எனது அப்பாவிற்கு போன் செய்து என் வண்டியை காணவில்லை இன்றைக்குள் உங்களை என்ன செய்கிறேன் பார் என்று மிரட்டினார். அன்று இரவு 8.30 மணியளவில் நான் என் வீட்டு அருகே உள்ள தாலிகுளம் ரோடு அருகே இயற்கை உபாதை கழிக்க சென்று கொண்டிருந்த போது பைக்கில் வந்து மறைந்திருந்து குண்டுமணி என்ற கருப்பசாமி அருவாளால் என் வலது தோள்பட்டையில் வெட்டினார். அருண் என்ற பூச்சி இருளப்பன் அருவாளை கொண்டு எனது தலையில் இடது பக்கத்தில் வெட்டினார். பொன்னி என்ற பொன்னிமாசாணம் வாளால் கொண்டு இடதுகை தோள்பட்டையில் வெட்டினார். வேலூர் சேர்ந்த வினோத்கண்ணன் அருவாளை கொண்டு கை, காலில் வெட்டினார். எனது அலறல் சத்தம் கேட்டு வீட்டில் இருந்த எனது அம்மா, அப்பா ஓடிவந்தார்கள்.

அவர்களை பார்த்தவுடன் எதிரிகள் ஓடிவிட்டனர். அன்று இரவு 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எனது பெற்றோர்கள் அழைத்து சென்றார்கள். முதல் சிகிச்சை செய்து விட்டு மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்பு மேல்சிகிச்சைக்காக சரவணா மருத்துவமனையில் 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அங்கு என்னை எஸ்.ஐ அவர்கள் விசாரித்தார். எஸ்.ஐ அவர்களிடம் நடந்த சம்பவத்திற்கு புகார் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 ஆகும். புகார்வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**